இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 12.12.2025

# பழனிசாமியின் பழைய ஊழல்கள் - 1

பத்துத் தோல்வி பழனிசாமி, பொதுக்குழு என்ற பெயரால் ஒரு கூட்டத்தைப் போட்டு, புலம்பித் தள்ளி இருக்கிறார். அ.தி.மு.க. தொண்டர்களால் நிராகரிக்கப்பட்டவர் அவர். சொந்தக் கட்சிக்காரர்களால் கருப்புக் கொடி காட்டப்பட்டவர் என்ற புகழைப் பெற்றவர் பழனிசாமி.

பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்ததைத்தான் பலரும் குறை சொல்கிறார்களாம். மற்றபடி அப்பழுக்கற்ற ஆட்சியை அவர் கொடுத்தாராம். யாராலும் அவரது ஆட்சியைக் குறை சொல்ல முடியாதாம். தனது ஆட்சி மீது ஊழல் குற்றச்சாட்டே இல்லை என்றும் வாய்க்கு வந்ததை அள்ளிவிட்டுள்ளார் பழனிசாமி. அரங்குக்குள் வந்துவிட்டோமே என்று பலரும் அதனைக் கேட்டுத் தொலைத்துவிட்டுத் திரும்பி இருக்கிறார்கள்.

**தனது ஆட்சிக் காலத்து ஊழல்கள், நான்கரை ஆண்டுகள் ஆனதால் நாட்டு மக்களால் மறக்கப்பட்டு இருக்கும் என்று நினைக்கிறார் பழனிசாமி. கமிஷனால் ஆட்சி நடத்தி, அதனைப் பிரித்துக் கொடுத்ததால் தனது நாற்காலியைத் தக்க வைத்துக் கொண்டவர் பழனிசாமி என்பதை, அவரைச் சுற்றி இருந்தவர்களே அறிவார்கள். அந்த ஒரு செயலால்தான், தன்னை இன்னும் சிலர் ஏற்றுக் கொண்டு, வணக்கம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பழனிசாமியும் அறிவார்.**

பழனிசாமியின் பழைய ஊழல்கள் குறித்து பலமுறை நாம் எழுதி இருக்கிறோம். மீண்டும் நினைவூட்டுவோம். நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, அவருக்கும்!

- தமிழ்நாடு ஆளுநரைச் சந்தித்து அ.தி.மு.க. அமைச்சர்கள் மீதான ஊழல் பட்டியலை தி.மு.க. வழங்கியது. முதலமைச்சர் பழனிசாமி, அமைச்சர்கள் வேலுமணி, தங்கமணி, விஜயபாஸ்கர், உதயகுமார், காமராஜ், ஜெயக்குமார் ஆகியோர் மீது ஊழல் புகார்கள் அதில் இடம்பெற்றிருந்தது.

நெடுஞ்சாலைத்துறை, உள்ளாட்சித் துறைகளில் மெகா டெண்டர் ஊழல், அமைச்சர்களும் - முதலமைச்சரும் போட்டி போட்டுக் கொண்டு உறவினர்களுக்கு டெண்டர் வழங்கி ஊழல், மின்சாரம் கொள்முதலில் ஊழல், நிலக்கரி இறக்குமதியில் ஊழல், பாரத்நெட் டெண்டர் ஊழல், உயிர்காக்கும் கொரோனா கருவிகள் - மருந்துகள் வாங்குவதில் ஊழல், காக்னிசெண்ட் டெக்னாலஜி கம்பெனிக்கு பிளானிங் பெர்மிஷன் கொடுப்பதற்கு அமெரிக்க டாலரில் ஊழல், குட்கா ஊழல், வாக்கி டாக்கி ஊழல், எல்.இ.டி ஊழல், கடல்நீரை குடிநீராக்கும் திட்டங்களில் ஊழல், மின் நிலையம் கட்டுமானப் பணிகளில் ஊழல் என்று முதலமைச்சர் திரு.பழனிச்சாமி மீதும்- அவரது அமைச்சர்கள் மீதும் ஊழல் புகார்கள் வந்ததை பட்டியல் போட்டுத் தரப்பட்டது.

மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குவதில் ஊழல், ஆவின் பாலில் ஊழல், ரேஷன் அரிசியில் ஊழல், மணலில் ஊழல், ப்ளீச்சிங் பவுடர், துடைப்பம் வாங்குவதில் ஊழல் என்று பலித்தது வரை எடுத்துவிடும் நோக்கத்துடன் அ.தி.மு.க. அமைச்சர்கள் தமிழக நிதி நிர்வாகத்தை நாசம் செய்ததை அந்த அறிக்கையில் பட்டியல் போட்டுக் கொடுத்தார்கள்.

- பழனிசாமி முதலமைச்சராக இருந்த போதே அவர் மீது டெண்டர் வழக்குப் பாய்ந்தது. உடனடியாக உச்சநீதிமன்றம் போய் தடை வாங்கினார். தடை கிடைக்காமல் போயிருந்தால், ஜெயலலிதா அம்மா வழியில் அவர் பதவி விலகி இருக்க வேண்டும். தடை வாங்கியதால் முதலமைச்சர் பதவியில் தொடர்ந்து நீடித்தார்.

**“உங்கள் மீது ஊழல் புகார் சொல்லப்படுகிறதே?’ என்று நிருபர்கள் டெல்லியில் வைத்து அவரிடம் கேட்டார்கள். “யார் மீதுதான் ஊழல் புகார் இல்லை” என்று சொன்னவர்தான் பழனிசாமி. எவ்வளவு புகழ்பெற்ற வாக்குமூலம் இது. இதனைக் கல்வெட்டாக வைத்து, அதற்குக் கீழே பழனிசாமி உட்கார்ந்து கொள்ளலாம்.**

தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைப் பணிகளை மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்ட டெண்டர் ஒப்பந்தத்தில் சுமார் 4,800 கோடி ரூபாய் முறைகேடு நடைபெற்றதாகவும் இதுகுறித்து பழனிசாமி மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி 2018 ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்தார். இவைகளை தனது உறவினர்களுக்கே டெண்டராகக் கொடுத்துக் கொண்டார் பழனிசாமி என்பதுதான் குற்றச்சாட்டு. இதன் மூலம் பழனிச்சாமி, தனது நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் பதவியையும், முதலமைச்சர் பதவியையும் தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என ஆர்.எஸ் பாரதி மனுவில் தெரிவித்து இருந்தார்.

வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி 2018 அக்டோபர் மாதம் உத்தரவிட்டது. அப்போது சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் என்ன சொல்லப்பட்டது தெரியுமா?

“இந்த வழக்கில் ஆரம்பத்திலிருந்தே குற்றம்சாட்டப்பட்டவருக்கு ஆதரவாக லஞ்ச ஒழிப்புத்துறை பதில் மனு தாக்கல் செய்துள்ளது. அரசுத் தரப்பு வாதமும் அதே நிலையில்தான் உள்ளது. மாநிலத்தின் முதல்வர் மீது கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகள் கூறப்படும்போது, குற்றச்சாட்டுக்கு எதிராக நீதிமன்றத்தில் அனைத்து ஆவணங்களும் அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், லஞ்ச ஒழிப்புத்துறை அதுபோல் செயல்படவில்லை. இதுவே நீதிமன்ற அவமதிப்புதான்.

அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளபடி நேர்மையான, நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இந்த வழக்கை வேறு விசாரணை அமைப்புக்கு மாற்றம் செய்வது தொடர்பான அனைத்து வழிகாட்டுதல்களும் கடைபிடிக்கப் பட்டுள்ளது. பொதுவாழ்க்கைக்கு வரும்போது அனைத்து மக்களிடமும் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும். அதுவும் உயர் அதிகாரத்தில் இருப்பவர்கள் இந்த நேர்மையை கண்டிப்பாகக் கடைபிடிக்காமல் ஊழலில் சிக்கினால் மக்களின் சாபத்திற்கு ஆளாக நேரிடும்.

அதிக அதிகாரம் கொண்டுள்ள ஒருவர் மீது குற்றச்சாட்டு வரும்போது அது தொடர்பாக நடத்தப்படும் விசாரணை நேர்மையாகவும், நியாயமாகவும், வெளிப்படையாகவும் நடத்தப்பட வேண்டும்” என்று நீதியரசர் ஜெகதீஷ் சந்திரா குறிப்பிட்டார். இதை எல்லாம் நாட்டு மக்கள் மறந்திருப்பார்கள் என்று பழனிசாமி நினைக்கிறார்.

உடனே உச்சநீதிமன்றம் போய் தீர்ப்புக்கு தடை வாங்கிக் கொண்டார் பழனிசாமி. தனது தலையைக் காப்பாற்றிக் கொண்டார் பழனிசாமி

- தொடரும்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.12.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் புதிய தலைவர் சண்முகம், துணைத் தலைவர் நக்கீரன் கோபால், செயலாளர் வயிரவன், பொருளாளர் வெங்கடாசலம் உள்ளிட்ட நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்று, 2026 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள சென்னை புத்தகக் காட்சியை தொடங்கி வைத்திட வேண்டுமென்று அழைப்பு விடுத்தனர். உடன் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆர்.எஸ். பாரதி உள்ளார்.

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் – ‘கலப்பை’ மக்கள் இயக்க நிறுவனத் தலைவர்

# டாக்டர் பி.டி.செல்வகுமார் தலைமையில் 50க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

## சென்னை – அண்ணா அறிவாலய வளாகத்தில் நிகழ்ச்சி!

**சென்னை, டிச. 12 -**

**முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல அரசு பள்ளிக் கூடங்களுக்கு வகுப்பறைகள் - கலைஅரங்கங்களை தன் சொந்த செலவில் கட்டிக் கொடுத்த மக்கள் சேவகர் “தென் மாவட்டங்களில் சிறந்தகல்வி நன்கொடையாளர்” விருது பெற்ற கலப்பை மக்கள் இயக்க நிறுவனத் தலைவர் டாக்டர் பி.டி.செல்வகுமார் தலைமையில் 50க்கும் மேற்பட்ட அவ்வியக்கத்தின் நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (11122025) காலை, கன்னியாகுமரி மாவட்டத்தில் பல அரசு பள்ளி கூடங்களுக்கு வகுப்பறைகள் மற்றும்-கலை அரங்கங்களை தன் சொந்த செலவில் கட்டிக் கொடுத்த மக்கள் சேவகரும் “தென் மாவட்டங்களில் சிறந்தகல்வி நன்கொடையாளர்” விருது பெற்றவருமான கலப்பை மக்கள் இயக்க நிறுவனத் தலைவர் டாக்டர் பி.டி.செல்வகுமார் தலைமையில் 50க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.

அப்போது கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ், ஆலங்குளம் தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் வழக்கறிஞர் பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் உடனிருந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த கலப்பை மக்கள் இயக்க நிர்வாகிகள் விவரம் வருமாறு :-

கன்னியாகுமரி மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் டி.பாலகிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர் தோப்பூர் வி.அனிதா, மாவட்ட பொருளாளர் விஸ்வை கே.சந்திரன், கலப்பை மக்கள் இயக்க கௌரவ ஆலோசகர் விஜயன், மாநில துணைத் தலைவர் நந்தகுமார், மாநிலச் செயலாளர் எம்.ராஜ்குமார், மாநில இளைஞர் அணிச் செயலாளர் ஜே.ரவி முருகன், மாநிலப் பொறுப்பாளர் நாகர்கோவில் டி. பால கிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணித் தலைவர் ஜி.சுபின்ஆனந்த், மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் வி.செல்வன், அகஸ்தீஸ்வரம் ஒன்றியத் தலைவர் எஸ்.ஏசுதாசன், ஒன்றியச் செயலாளர் டி.ஜெகன், மாவட்ட ஐடி விங் பொறுப்பாளர் ஜி.செந்தில், மாநில மருத்துவ அணி தலைவர் டாக்டர் கௌதம், சமூக சேவகர் சொர்ணப்பன், திரைப்படத் தயாரிப்பாளர் இயக்குநர் விஷ்ணுஹாசன், நடிகர் விஜயபாலாஜி, மகளிர் அணி பொறுப்பாளர் லெட்சுமி உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம்

# 376 நில அளவர்கள் தேர்வு செய்யப்பட்டு - பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச.12–**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 376 நில அளவர்கள் மற்றும் 100 வரைவாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.12.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நிலஅளவைப் பதிவேடுகள் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 376 நிலஅளவர்கள் மற்றும் 100 வரைவாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் செயல்படும், நிலஅளவைப் பதிவேடுகள் துறையின் முக்கிய செயல்பாடுகள் நிலங்களை அளவிடுதல், உட்பிரிவு செய்தல், பட்டா மாற்றம் செய்தல், நில ஆவணங்களைப் பராமரித்தல், கணினிமயமாக்கல் மற்றும் நில உரிமை முறைகளை முறைப்படுத்துதல் போன்றவையாகும். இது வருவாய் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு, நிலம் தொடர்பான உரிமைகள், இருப்பிடம், அளவு மற்றும் வகை பற்றிய தகவல்களைப் பதிவு செய்து, வெளிப்படைத்தன்மையுடன் நிர்வகிப்பதை உறுதி செய்கிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நிலஅளவைப் பதிவேடுகள் துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெறும் வகையில் கடந்த 4 ஆண்டுகளில் 800 நிலஅளவர்களும், 302 வரைவாளர்களும் புதியதாக நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். தற்சமயம் 2025ஆம் ஆண்டில் 376 நிலஅளவர்கள் மற்றும் 100 வரைவாளர்கள் காலிப் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு நேற்று முன்தினம் முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இத்துறையின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் இணையவழி பட்டா மாறுதல் சேவையின் மூலமாக இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் உட்பிரிவு உள்ள பட்டா மாறுதல் இனங்களில் 61.77 இலட்சம் பட்டாக்களும், உட்பிரிவு அல்லாத பட்டா மாறுதல் இனங்களில் 79.25 இலட்சம் பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் உட்பிரிவு உள்ள பட்டா மாறுதல் இனங்கள் தீர்வு செய்ய 60 நாட்களும், உட்பிரிவு அல்லாத பட்டா மாறுதல் இனங்கள் தீர்வு செய்ய 31 நாட்கள் என இருந்து வந்த நிலையில், இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு உட்பிரிவு உள்ள பட்டா மாறுதல் இனங்கள் 30 நாட்களிலும், உட்பிரிவு அல்லாத பட்டா மாறுதல் இனங்கள் 14 நாட்களிலும் தீர்வு செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் அரசு நிலங்களில் நீண்ட காலமாக அனுபவம் செய்து வந்த ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் பல்வேறு திட்டத்தின் கீழ் இந்த அரசு பொறுப்பேற்ற நான்கரை ஆண்டுகளில் இதுவரை 20.41 இலட்சம் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, நில நிருவாக ஆணையர் டாக்டர் கே.சு.பழனிசாமி, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் தீபக் ஜேக்கப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் விரிவாக்கம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தத் திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்ட விதம் குறித்தும், அவர்களின் வாழ்வாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் நிகழ்ச்சியில் விரிவாகப் பேசப்படும். இது மற்ற பெண்களுக்கும் இந்தத் திட்டத்தில் சேர ஊக்கமளிக்கும். மேலும், அரசு செயல்படுத்தி வரும் பிற நலத்திட்டங்கள் குறித்தும் விளக்கப்படும். இது பெண்களின் வாழ்வில் ஒரு புதிய விடியலைக் கொண்டுவரும்.

### அரசு துணை நிற்கும்

‘வெல்லும் தமிழ் பெண்கள்’ நிகழ்ச்சி, பெண்களின் சாதனைகளையும், அவர்களின் திறமைகளையும் வெளிப்படுத்தும் ஒரு மேடையாகவும் அமையும். இது பெண்களை ஊக்குவிப்பதோடு, அவர்களின் கனவுகளை நனவாக்க அரசு துணை நிற்கும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தும். இந்தத் திட்டம் பெண்களின் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் என்பதில் சந்தேகமில்லை.

### முக்கிய மைல்கல்லாக அமையும்

இந்தத் திட்டத்தின் வெற்றி, தமிழ்நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும். பெண்களின் கைகளில் அதிகாரம் சென்றடைவது, ஒரு வலுவான மற்றும் சமத்துவமான சமூகத்தை உருவாக்க உதவும். முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இந்த முயற்சிக்கு பரவலான வரவேற்பு கிடைத்துள்ளது.